TNVR250009792024

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு**

முன்னிலை. திரு. மூ. ராமநாதன், B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ம் நாள் வியாழக்கிழமை

அசல் வழக்கு எண்.128/2024

A. முத்தையா ...... வாதி

/எதிரிடை/

1. ஜெயராஜ்
2. வேதமுத்து ..... பிரதிவாதிகள்

(இடைநிலை மனு எண்.8/2026, நாள் 17.04.2026 ன் படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டது.)

இவ்வழக்கானது திருவில்லிபுத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.57/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்ற ஆள்வரை எல்லை காரணமாக இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.128/2024 ஆக கடந்த 13.08.2024 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் கடந்த 27.04.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி. M. சகுந்தலாதேவி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் திரு. P. முனியாண்டி அவர்கள் ஆஜாராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும் .....

## <u>தீர்ப்புரை</u>

**அ)** தாவாச் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதென்று விளம்புகை செய்யக் கோரியும்,

**ஆ)** தாவாச் சொத்தில் பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ இடையூறு செய்யக் கூடாதென தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும்

**இ)** இவ்வழக்கின் செலவுத்தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தச் சொல்லி உத்தரவிடக் கோரியும் வாதியால் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தாக்கல் செய்த வழக்குரையின் சுருக்கம் :–**

2.1) தபசில் சொத்தானது விருதுநகர் மாவட்டம், கூமாப்பட்டி வழி, கான்சாபுரம் அஞ்சல், அணைக்கரைப்பட்டி கிராமத்தில் உள்ளதென்றும், 1920ம் வருடம் வாதியின் முப்பாட்டனார் சப்பானி என்ற சற்குணம் என்பவர் கிரையம் பெற்று, அவரை தொடர்ந்து அவரது மகன்களான முத்தையா, வேதநாயகம், பிச்சைமுத்து ஆகியோர் அவரவர் பாகத்தை அனுபவித்து அதன் பிறகு வேதநாயகமும், பிச்சை முத்துவும் அவர்கள் பாகத்தை அவரது சகோதரரும், வாதியின் தகப்பனாரான முத்தையா மகன் ஆப்ரகாமுக்கு கிரையம் செய்து கொடுத்டது அவரை தொடர்ந்து வாதி அனுபவித்து வருகிறார். கடந்த 1920ம் ஆண்டிலிருந்து 100 வருடங்களுக்கு மேலாக எவ்வித இடையூறுகளும் இடைஞ்சல்களும் இல்லாமல் வாதி தாவா சொத்தில் மரம், செடி, கொடிகள், காய்கனிகள் பயிரிட்டு அனுபவித்து வருகிறார். இந்நிலையில் தாவா சொத்திற்கு எவ்வித உரிமையும் இல்லாத பிரதிவாதிகள் கடந்த 21.07.2020ல் தாவா சொத்துக்குள் அக்கிரமாக பிரவேசம் செய்து, அதிலுள்ள செடிகளை ஆக்கிரமணம் செய்ய முயற்சித்து வாதி, பிரதிவாதிகளின் அத்துமீறிய செயலை கண்டித்து நடவடிக்கை எடுக்கக்கோரி 21.07.2020ல் வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

2.2) பின்னர் வாதி மனு செய்ததில் தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் VAO, RDO மற்றும் சர்வே துறையிலிருந்து AD ஆகியோர்கள் தாவா சொத்து ஆவணங்களை பார்வையிட்டும், அத்துமால் பார்வையிட்டும் தாவா சொத்து வாதிக்கு உரிமையுடைய சொத்து என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். தாவா சொத்தில் உரிமை இல்லாத பிரதிவாதிகள் மீண்டும் தாவாச் சொத்தில் அத்துமீறி நுழைந்து செங்கல், மணல் போன்ற பொருட்களை கொட்டி கட்டிடம் கட்ட எத்தனித்து வருகின்றதை கண்டித்து 04.08.2020ம் தேதி வாதி தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பபடாமலும், பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எந்த காலத்திலும் உரிமை கிடையாது என்று தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், பிரதிவாதிகள் தாவா நிலத்தில் நுழைவதிலிருந்து தடுத்து உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் தாவா வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :–

3.1) வாதி 1920ம் வருட கிரையப் பத்திரத்தில் கண்ட சப்பாணி என்ற சற்குணம் என்பவர் வாதியின் முப்பாட்டனார் என்பதையும், முத்தையா, வேதநாயகம், பிச்சைமுத்து ஆகியோர்கள் வாரிசுகள் என்பதையும் வாதி உரிய ஆவணங்களின் மூலம் நிரூபித்தால் மட்டுமே வாதியின் உறவுமுறைகளை ஏற்றுக்கொள்ள முடியும். வாதியோ, வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நபர்களோ வழக்குரை தபசில் சொத்தினை ஒரு நாள் கூட அனுபவம் செய்ததில்லை. வழக்குரை தபசில் சொத்து முழுவதும் பிரதவிாதிகள் அனுபவத்திலேயே இருந்து வருகிறது. பிரதிவாதிகள் 21.07.2020ம் தேதியில் வழக்குரை தபசில் சொத்திற்குள் அத்துமீறி நுழைய வேண்டிய அவசியமில்லை. பிரதிவாதிகள் சுமார் 45 வருடங்களுக்கு மேலாக வழக்குரை தபசில் சொத்தினை தொடர்ந்து அனுபவம் செய்து வருகிறார்கள். வழக்குரை தபசில் சொத்திற்கான பட்டாவும் பிரதிவாதியின் பெயரிலேயே வழங்கப்பட்டு இருக்கிறது.

3.2) VAO, RDO மற்றும் சர்வே துறையிலிருந்து AD ஆகியோர்கள் வழக்குரை தபசில் சொத்தினை பார்வையிடவும் இல்லை. வாதியின் இடத்தினை பார்வையிட்டால் அதற்கு உரிய குறிப்பாணை வாதிக்கு வழங்கியிருப்பார்கள் என்றும், வழக்குரை தபசில் சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் எதையும் வாதி வழக்குரையுடன் தாக்கல் செய்யாததிலிருந்து வழக்குரை தபசில் சொத்திற்கும், வாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதும், வழக்குரை தபசில் சொத்தின் மீது வாதிக்கு எவ்விதக உரிமையும் இல்லை என்பது விளங்கும். வாதி வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் சார்பதிவாளர் அலுவலகத்தில் சமீப காலங்களில் எடுக்கப்பட்ட ஆவணங்கள் ஆகும். வழக்குரை தபசில் சொத்து உண்மையிலேயே வாதிக்கோ, வாதியின் பாட்டனார், முப்பாட்டனார் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு இருந்தாலும், வழக்குரை தபசில் சொத்தினை அனுபவம் செய்து வந்திருந்தாலும் வழக்குரை தபசில் சொத்து சம்பந்தமான அசல் உரிமை மூல ஆவணங்களையும், அசல் வருவாய் ஆவணங்களையும் வாதி தாக்கல் செய்திருப்பார் என்றும், வருவாய் ஆவணங்கள் எதையும் வாதி வழக்குரையுடன் தாக்கல் செய்யவில்லை என்பதால், எக்காலத்திலும் இல்லை என்பதும், எனவே, வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல

என்றும், எனவே, வாதியின் வழக்கை பிரதிவாதிகள் பக்க செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டது.

**4.** இவ்வழக்கின் வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து வழக்கை தீர்மானிக்கும் பொருட்டு, இந்நீதிமன்றத்தால் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

<u>வழக்கு எழுவினாக்கள் :–</u>

| | |
|---|---|
| 1. | Whether the Plaintiff is entitled is Declaration relief as prayed for?<br>வாதிக்கு பிராதில் கோரியுள்ளவாறு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 2. | Whether the Plaintiff is entitled Permanent Injunction as prayed for?<br>வாதிக்கு பிராதில் கோரியுள்ளவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 3. | To What other relief ?<br>வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது? |

**5.** வாதி தரப்பில், வாதி முத்தையா வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பில் மற்றொரு சாட்சியான அ.சா.2 ஆக சுரேஷ்குமார் என்பவர் விசாரிக்கப்பட்டு, சா.சா.ஆ.3 மற்றும் சா.சா.ஆ.4 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 1ம்பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் மற்றொரு சாட்சியாக பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6. <u>எழுவினா 1–க்கான தீர்வு</u> :–**

6.1) **வாதிக்கு பிராதில் கோரியுள்ளவாறு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?**

வாதி அவருடைய வழக்கை நிரூபணம் செய்ய வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்துள்ளார். வாதி தரப்பு வழக்கை பொறுத்தவரையில், வழக்கு சொத்தானது வாதியின் முப்பாட்டனாரான சப்பாணி என்ற சற்குணம் என்பவர் கிரையம் பெற்று, அதனை

தொடர்ந்து அவருடைய மகனான முத்தையா, வேதநாயகம் மற்றும் பிச்சைமுத்து ஆகியோர்கள் அவரவர் பாத்தியத்தை அடைந்து வாதியின் தகப்பனாரான முத்தையாவின் உடன்பிறந்த இரண்டு சகோதரர்களும் வழக்கு சொத்தில் அவருடைய பங்கை பொறுத்து வாதிக்கு கிரையம் செய்து கொடுத்ததாகவும், அதனடிப்படையில் வாதி வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

6.2) வாதி அவருடைய வழக்கிற்கு ஆதரவாக தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்து பார்க்கையில், வாதியின் முப்பாட்டனாரான சப்பாணி என்ற சற்குணம் வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாக சர்வே எண்.454/1 மற்றும் 473/1 ல் கண்ட சொத்துக்களை கிரையம் பெற்றுள்ள விவரம் தெரியவருகிறது. ஆனால், வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை வழக்கு சொத்துக்களோடு தொடர்புபடுத்தி பார்க்கையில், வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களும் வழக்கு சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களும் வெவ்வேறாவை என்பது சர்வே எண் அடிப்படையில் புலனாகிறது. ஆகையால், வா.சா.ஆ.1 ஆவணமானது வழக்கு சொத்திற்கு தொடர்பற்ற ஆவணம் என்பதை இந்நீதிமன்றம் கண்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தானது வழக்கு சொத்தோடு ஒப்பீடு செய்து பார்க்கையில் வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கான நான்கு மால் எல்கை வழக்கு சொத்து எல்கையோடு ஒத்து காணப்படுகிறது. ஆனால், சர்வே எண் எதுவும் குறிப்பிடப்படாமல் விடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் முழுமையான தாள்கள் சமர்க்கப்படாமல் முழுமையற்ற ஆவணமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தினை பரிசீலனை செய்து பார்க்கும் போது ஆவணமானது வாதியின் பெயரில் பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் அந்த ஆவணம் முழுமையான ஆவணமாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கபடாத பட்சத்தில் வா.சா.ஆ.3 ஆவணமாக எந்த சர்வே எண்ணில் கண்ட சொத்தானது வாதியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ததாக முடிவு செய்ய இயலாது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது சர்வே எண்.468 ல் கண்ட கிழமேல் வடதலை 9 கெஜம், தென்தலை 14 கெஜம், தென்வடல் 40 கெஜம் உள்ள காலிமனை வாதியின் பெயரில் இருப்பதாக வில்லங்க சான்றிதழ் பதிவேடு

காணப்பட்டிருந்தாலும் மேற்படி கிரைய ஆவணம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் வாதிக்கு வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழ் காணப்படும் சொத்து வாதிக்கு எவ்வாறு உரிமை மாற்றம் செய்யப்பட்டதென்றும், ஆவணத்தை பிறப்பித்த நபருக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதையும் முடிவு செய்ய இயலாது. வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளவாறு சப்பாணி என்ற சற்குணம் வழக்கு சொத்தை கிரையம் பெற்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தவறியபட்சத்தில் வாதி வழக்குரையில் கூறியுள்ளவாறு வழக்கு சொத்து ஆதியில் சப்பாணி என்ற சற்குணத்திற்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதை தகுந்த சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6.3) மேலும், சப்பாணி என்ற சற்குணத்தின் வாரிசுகள் அவர்களுடைய தகப்பனாரான சப்பாணி என்ற சற்குணத்திற்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தினை அடைந்து அனுபவம் செய்து வந்து அதன் பின்னர் வாதிக்கு கிரையம் எழுதி கொடுத்ததாக வழக்குரையில் குறிப்பிட்டுவிட்டு அதற்கு ஆதரவாக எவ்வித கிரைய ஆவணங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், வ.புதுப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு, வழக்குரையில் கண்டுள்ள சர்வே எண்.468 என்பது நத்தம் புறம்போக்கு நிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ளதென்றும், சர்வே எண்.468 ஆனது பல்வேறு உட்பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டு கூறியுள்ள நிலையில், வாதி சர்வே எண்.468 ல் எந்த உட்பிரிவில் உரிமை கோருகிறார் என்பதை நிரூபணம் செய்ய தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், சர்வே எண்.468 /20 ஆனது வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறதென்று சொல்லியுள்ள நிலையில், கிராம நிர்வாக அலுவலர் மேற்படி சர்வே எண்.468/20 வாதியின் அனுபவத்தில் இல்லை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ள நிலையில் வாதி வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்து வருவதாக கருத இயலாது.

6.4) முடிவாக, வாதி வழக்கு சொத்தில் வாதிக்கு உரிய உரிமையையும், அனுபவத்தையும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபணம் செய்ய தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் எழுவினா –க்கு தீர்வு காணப்படுகிறது.

**7. எழுவினா –2**

**வாதிக்கு பிராதில் கோரியுள்ளவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?** என்பதை ஆராய்ந்து பார்க்கையில், இந்நீதிமன்றம் எழுவினா–1க்கான தீர்வானது வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் வாதி வழக்கு சொத்தில் அவருடைய உரிமை மற்றும் அனுபவத்தை நிரூபணம் செய்ய தவறிவிட்டதால் வாதிக்கு அவர் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடிய தல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8. எழுவினா –3 க்கான தீர்வு**

**வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?**

எழுவினா –1 மற்றும் எழுவினா –2 க்கான தீர்வு ஆனது வாதிக்கு எதிராக தீர்வு கண்டுள்ளதால் வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, வாதியின் வழக்கானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் செய்யப்பட்டு, என்னால் படித்துப்பார்க்கப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI
Date: 2026.04.30 18:20:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வத்திராயிருப்பு.

வாதி தரப்பு சாட்சி :–

| | | |
|---|---|---|
| வா.சா.1 | 10.02.2023 | முத்தையா |
| வா.சா.2 | 16.02.2026 | சுரேஷ்குமார் (கிராம நிர்வாக அலுவலர்) |

வாதி தரப்பு சான்றாவணங்கள் :–

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 19.07.2020 | வாதியின் முப்பாட்டனார் தாவா சொத்தை கிரையம் பெற்ற ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 08.12.1944 | வாதியின் பாட்டனார்கள் தாவா சொத்தை அடமானம் கொடுத்த பத்திரத்தின் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | 27.08.1948 | வாதியின் பாட்டனார்கள் அடமானம் கொடுத்த தாவா சொத்தை மீட்டு வாதியின் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்த பத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.4 | 1948 – 1980 | வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | --- | தாவா சொத்தின் புலவரைபடம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 02.07.2008 | வாதியின் தகப்பனாரின் வாரிசு சான்றிதழின் அசல் |
| வா.சா.ஆ.7 | 04.08.2020 | வழக்கிறஞர் அறிவிப்பு நகல் |
| வா.சா.ஆ.8 | 02.12.2013 | வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u>

| | | |
|---|---|---|
| பி.சா.1 | 12.10.2023 | ஜெயராஜ் |
| பி.சா.2 | 15.09.2025 | சுரேஷ்குமார் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாண்றாவணங்கள்</u> – இல்லை

<u>சாட்சிய சான்றாவணங்கள்</u> :–

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | --- | வத்திராயிருப்பு வருவாய் வட்டாட்சியர் அவரக்கு பதிலாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க சாட்சிக்கு அளித்த ஒப்படைக்கும் அறிவிப்பு அசல் |
| சா. சா.ஆ.2 | --- | வத்திராயிருப்பு தாலுகா, வ.புதுப்பட்டி கிராமம், நத்தம் சர்வே எண்.468 மற்றும் 468/20க்குரிய வரைபடம் மற்றும் அ பதிவேடு உண்மை நகல் |
| சா.சா.ஆ.3 | --- | நத்தம் புல எண்.468/20 க்கான நத்தம் அடங்கல் |
| சா.சா.ஆ.4 | --- | நத்தம் புல எண்.468/20 க்கான இணைய அடங்கல் |

<u>நீதிமன்ற சான்றாவணங்கள் </u>:– இல்லை

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI
Date: 2026.04.30 18:20:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வத்திராயிருப்பு.

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர், நீதிமன்றம்.**
**வத்திராயிருப்பு,**
**அசல் வழக்கு எண். 128/2024**
**சீரான / வரைவு தீர்ப்புரை**
**நாள். 30.04.2026**